பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 19 ஞாயிற்றுக்கிழமை 03.07.2022 கதிர் 131

## தனியார் பஸ் சேவைகள் நாளை முதல் முடங்கும்?

நாளை முதல் நாடு முழுவதும் தனியார் பஸ் சேவைகளை முழுமையாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது என அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன ஊடகங்களிடம் ☞2

## வெளிநாடு செல்ல முற்பட்ட 51 பேர் திருகோணமலைக் கடலில் கைது!



இலங்கையிலிருந்து சட்டவிரோதமான முறையில் கடல்மார்க்கமாக வெளிநாடு செல்ல முற்பட்ட 51 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத ஆள்கடத்தல்களைக் கட்டுப்படுத்தவதற்காகக் ☞2

## மாரவில வீட்டிலும் 25 பேர் சிக்கினர்!




இலங்கையிலிருந்து சட்டவிரோதமாகக் கடல் மார்க்கமாக வெளிநாடு செல்வதற்குத் தயாராக இருந்த 25 பேர் மாரவில பிரதேசத்தில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கடற்படையின் ஊடகப்பிரிவு ☞2

# சகல பாடசாலைகளுக்கும் அடுத்த வாரம் விடுமுறை!



### எரிபொருள் நெருக்கடி நிலைமையால் கல்வி அமைச்சு அதிரடித் தீர்மானம்

**நாளை ஜூலை 4ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஜூலை 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நாட்டிலுள்ள அனைத்து அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் ஆகியவற்றுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.**

**நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி நிலைமையைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.** ☞2

### தனுஷ்கோடிக் கடற்கரையில்

## மயங்கிய நிலையில் தஞ்சமடைந்திருந்த வயோதிபத் தம்பதியரில் ஒருவர் மரணம்





தமிழகத்தின் இராமேஸ்வரம் அருகே உள்ள தனுஷ்கோடிக் கடற்கரையில் மயங்கிய நிலையில் தஞ்சமடைந்திருந்த இலங்கையைச் சேர்ந்த வயோதிபத் தம்பதியரில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாகப் படகு மூலம் சென்று கடந்த திங்கட்கிழமை காலை தனுஷ்கோடிக் கடற்கரைப் ☞2



## ரணிலை விமர்சிக்காதீர்; அவகாசம் வழங்குங்கள்!

### திகாம்பரம் வேண்டுகோள்

நெருக்கடியான நிலைமையில்தான் பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார். எனவே, அவரை உடனடியாக விமர்சிக்காமல் அவருக்குக் கால அவகாசம் வழங்க வேண்டும். ☞2

## காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்த தந்தையை தாயாருடன் சேர்ந்து கொலை செய்த மகன்!

### பதுளையில் பயங்கரம்; காட்டில் வீசப்பட்டது சடலம்

தந்தை ஒருவர் மகனின் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் அவரது மனைவியும் மகனும் சேர்ந்து மண்வெட்டியால் தாக்கிக் கொலைசெய்த கொடூர சம்பவம் பதுளையில் இடம்பெற்றுள்ளது.

பதுளை - கஹட்டருப்ப பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதான நபரே இவ்வாறு மண்வெட்டியால் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் 33 வயதான மனைவியும் அவரது 17 வயதான மகனுமே இந்தக் கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும், அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் பதுளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மகனின் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அவரைத் துன்புறுத்தியதே கணவரின் கொலைக்கான காரணம் ☞2

## நோர்வே அரசின் முக்கியஸ்தருடன் சாணக்கியன் எம்.பி. நேரில் சந்திப்பு

### இலங்கை நிலைமை தொடர்பில் கலந்துரையாடல்

நோர்வே வெளிவிவகார அமைச்சின் தெற்காசியாவுக்கான பிரதிப் பணிப்பாளருக்கும் (Sigbjorn Tenfjord) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சாணக்கியன் எம்.பி. நோர்வேக்கு விஜயம் செய்துள்ள நிலையிலேயே இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகள், அதனால் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் தொடர்பிலும், இவற்றுக்



கான தீர்வுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

## சகல பாடசாலைக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் கல்வி அமைச்சு இன்று பிற்பகல் விடுத்துள்ள அறிக்கையில்,

கடந்த இரண்டு வாரங்களில் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வருகையின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்த பின்னர், கல்வி அமைச்சின் அதிகாரிகள், மாகாணக் கல்விச் செயலாளர்கள் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுடன் 'சூம்' தொழில்நுட்பத்தின் ஊடாக இன்று நடைபெற்ற கலந்துரையாடலில், மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சில் எரிபொருள் விநியோகம் குறித்த அறிவிப்புக்களை மேலும் கவனத்தில்கொண்டு, 04.07.2022 முதல் 08.07.2022 வரையிலான வாரம் நாடு முழுவதும் உள்ள அனைத்து அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் ஆகியவற்றுக்கு விடுமுறை வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடுமுறைக்குப் பதிலாக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னராக விடுமுறை நாள்களில் பாடசாலைகள் நடத்தப்படும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரணிலை விமர்சிக்காதீர்; ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் இணைத் தலைவரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தனியார் வானொலி ஒன்றில் ஒலிபரப்பான அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது சர்வாதிகார ஜனாதிபதியே ஆட்சியில் இருக்கின்றார். தன்னை நம்பி வாக்களித்த 69 இலட்சம் மக்களையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏமாற்றியுள்ளார். அவருக்கு முழு அதிகாரமும் இருந்தும் அவர் நாட்டை முன்னேற்றாமல் நாட்டை அவர் சீரழித்துவிட்டார்.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றிருந்தால் அவரையும் சுதந்திரமாகச் செயற்பட விட்டிருக்கமாட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

எனவே, ஜனாதிபதி கோட்டாபய உடன் பதவி விலக வேண்டும். அவர் பதவி விலகிய பின்னர் சர்வகட்சி அரசு அமைந்தால் அதற்கு சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் மட்டுமல்ல அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பியினரும் ஆதரவு வழங்குவார்கள். இதை இரு கட்சிகளின் தலைவர்களும் வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டார்கள் - என்றார்.

## மயங்கிய நிலையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் மயங்கிய நிலையில், மன்னார் - முருங்கன்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த சிவன், பரமேஸ்வரி ஆகிய வயோதிபத் தம்பதியினர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் பரமேஸ்வரி என்ற வயோதிபப் பெண் தொடர்ந்து மதுரை ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று நள்ளிரவு உயிரிழந்துள்ளார்.

## காதலுக்கு எதிர்ப்புத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனச் சந்தேகநபரான மனைவி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், மனைவி கடந்த மே மாதம் 31ஆம் திகதி இந்தக் கொலையை செய்து, மகனுடன் சேர்ந்து சடலத்தைக் காட்டில் வீசிவிட்டு பொலிஸ் நிலையத்தில் தனது கணவனைக் காணவில்லை என முறைப்பாடு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வெளிநாடு செல்ல ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினரால் தொடர்ந்தும் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலையில், திருகோணமலை கடற்பரப்பில் இன்று அதிகாலை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது படகொன்றுடன் குறித்த 51பேரும் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் கடத்தல்காரர்கள் 6 பேர் உட்பட 41 ஆண்களும், 5 பெண்களும் மற்றும் 5 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கம்பஹா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 5 முதல் 56 வயதுக்குட்பட்டவர்களாவர்.

இவர்கள் திருகோணமலை துறைமுகப் பொலிஸாரிடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படையின் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## மாரவில வீட்டிலும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ள அறிக்கையில்,

இலங்கை கடற்படை, இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் பொலிஸார் இணைந்து நேற்று மாரவில பிரதேசத்தில் நாட்டிலிருந்து சட்டவிரோதமாகக் கடல் மார்க்கமாகச் செல்வதற்குத் தயாராக இருந்தனர் எனச் சந்தேகிக்கப்படும் 9 ஆண்கள், 6 பெண்கள் மற்றும் 10 சிறுவர்கள் உட்பட 25 பேரைக் கைதுசெய்துள்ளனர். இவர்கள் 25 பேரும் ஒரே வீட்டில் தங்கியிருந்த வேளை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு, வாழைச்சேனை மற்றும் ஹலவத்தை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

25 பேரும் மேலதிக விசாரணைகளுக்காக மாரவில பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் - என்றுள்ளது.

## தனியார் பஸ் சேவைகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

பொதுப் போக்குவரத்துச் சேவையை தொடர்ந்து கொண்டு செல்லும் நோக்கில் தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சாலைகளில் எரிபொருளை வழங்குமாறு அரசு இதற்கு முன்னர் அறிவுறுத்தியது.

எனினும், இலங்கை போக்குவரத்துச் சபையின் சில பிரதேச பஸ் சாலைகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் வழங்கப்படுவதோடு சில இடங்களில் எரிபொருள் வழங்க மறுக்கப்படுகின்றது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கூறினார்.

எனினும், முழுமையான அளவில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சகல ரயில் சேவைகளுக்குமான எரிபொருள் கையிருப்பில் உள்ளது என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622



# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வாய்ப்பந்தல் தலைமைகள்

**நாட்டை இந்த மோசமான நெருக்கடிக்குள் தள்ளியிருக்கும் கோட்டாபய ஆட்சிப்பீடத்தை அதிகாரத்திலிருந்து கலைக்க வேண்டும் – துரத்த வேண்டும் – என்ற ஆக்ரோஷம் மக்கள் மத்தியில் பெருஞ்சீற்றமாய் கிளர்ந்திருப்பது என்னவோ உண்மைதான்.**

**ஆனால், அந்த உணர்வெழுச்சியை வலிமைமிக்க ஒரு சக்தியாகக் கட்டியெழுப்பி, மக்கள் போராட்டத்தை பெரும் கொதிநிலையில் வைத்து, ஒரு புரட்சியை – ஜனநாயகக் கிளர்ச்சியை – ஏற்படுத்தி, ஆட்சியாளர்களை ஓட விரட்டும் தாற்பரியம் எதிரணியிடம் இல்லவே இல்லை என்பதுதான் உண்மை.**

**கோட்டா – ரணில் கூட்டுப் பக்கத்தில் உள்ள 'பிளஸ் பொயின்ட்' இதுதான்.**

**மக்களைப் பெரும் போராட்ட சக்தியாகக் கட்டியெழுப்பி, அவர்களின் சீற்ற வலுவை ஒரு விஸ்வரூபப் போராட்டமாக வெளிக்காட்டக் கூடிய – வெளிக்காட்ட வேண்டிய – களச் சூழல் இதுதான். பொருத்தமான சமயம் இதுவே.**

**கனகச்சிதமான சந்தர்ப்பம் இப்போதுதான் அமைந்து வந்திருக்கின்றது. தவறுகளையே இழைத்து வரும் ஆட்சிப் பீடத்திற்கு எதிராக மக்கள் கிளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு இது போன்ற இன்னொரு வாய்ப்பான சூழல் வருமா என்பது சந்தேகமே.**

**ஆனால் இந்தச் சூழ்நிலையே சமயோசிதமாக – தந்திரோபாயமாக – தந்திரமாக – சாணக்கியத்தனமாக – பயன்படுத்தக்கூடிய அரசியல் தலைமை எதிரணி பக்கத்தில் இல்லை என்பதுதான் பொதுவுண்மை.**

**ஏப்ரல் முதல் வாரத்தை ஒட்டி அத்தகைய எழுச்சி இயல்பாகவே தன்பாட்டில் உருவாயிற்று என்பது உண்மைதான். ஆனால், கொதித்தெழுந்து, பொங்கி வரும் பாலுக்குச் சிறுதுளி தண்ணீரை தெளித்ததும் பொங்கும் பால் பொட்டென அடங்கி விடுவது போல, அந்த அரசியல் கொதிநிலைக்குள் தந்துரோபாயமாகப் புகுந்து, பிரதமர் பதவியை ஏற்று, மக்களின் அந்தக் கொதிநிலை எழுச்சியை அப்போது அடங்கப் பண்ணிவிட்டார் ரணில் விக்கிரமசிங்க.**

**அதற்குப்பின்னர் மக்கள் எழுச்சி பழைய பிரவாகத்தில் வெளிப்படுவதாக இல்லை.**

**தனித்தனியே மக்கள் ஒவ்வொருவரிடமும் ஆட்சியாளர்களுக்கு எதிரான சீற்றம் கனன்றுகொண்டுதான் இருக்கின்றது. முந்தைய நிலைமைகளை விட அது மோசமாகப் பிரவகித்துக் கொண்டுதான் உள்ளது.**

**அந்த மக்கள் எழுச்சியை கோர்த்துக்கட்டி, வெளிக்கொணர்ந்து, நாட்டுக்குரிய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வலிமையான மாற்று ஜனநாயக தலைமை நாட்டில் இன்னும் உருவாகவில்லை என்ற பின்னடைவு நிலையின் யதார்த்தத்தைப் புரிய வைக்கும் அம்சம் இது.**

**இது விடயத்தில் சீற்றமுற்றுள்ள மக்களின் இரண்டாவது அலை, சுனாமிப் பேரலை போல கிளர்ந்தெழுந்து தாக்கும் என்று ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசநாயக்க வாய்ப் பந்தல் போடுவதில் அர்த்தம் இல்லை.**

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா கூட இப்படித்தான் வாய்ச் சவடால் கதைத்துக் கொண்டிருக்கின்றாரே தவிர, மக்களை ஒன்று திரட்டி, ஒரு பேரியக்கமாக மாற்றி, கோட்டா ஆட்சிப் பீடத்தைத் துரத்துவதற்குக் காத்திரமாக ஏதும் செய்பவராக இல்லை.**

**மக்களை ஒன்றிணைக்கும் 'கரிஸ்மா' உள்ள – வசீகரம் மிக்க – மக்களைக் கவர்ந்திழுக்கக் கூடிய – தலைமைக்குப் பஞ்சம். அது ராஜபக்ஷக்களின் காட்டில் மழையாக மாறிவிட்டது. அவ்வளவுதான்.**

# நாட்டில் ஸ்திரத்தன்மையை நிலைநாட்ட கொள்கைச்சீராக்கங்களை ஆராய தயார்

## இலங்கை வர்த்தகப்பேரவையின் தலைவர் தெரிவிப்பு



நாட்டில் கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்தபோதே சர்வதேச நாணய நிதியத்திடம் உதவியை நாடுமாறு தாம் வலியுறுத்தியதாகச் சுட்டிக்காட்டியிருக்கும் இலங்கை வர்த்தகப்பேரவையின் தலைவர் விஷ் கோவிந்தசாமி, பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் ஏனைய கட்டமைப்புக்களுடன் இணைந்து நாட்டில் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டுவதற்கு அவசியமான கொள்கைச்சீராக்கங்களை மேற்கொள்வது தொடர்பாக ஆலோசனைகளை வழங்குவதற்கு தாம் தயாராக இருக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

இலங்கை வர்த்தகப்பேரவையின் (சேம்பர் ஒவ் கொமர்ஸ்) 183 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் கொழும்பில் அமைந்துள்ள சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது.

அங்கு 2022,2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை வர்த்தகப்பேரவையின் தலைவராக மீளத்தெரிவுசெய்யப்பட்ட விஷ் கோவிந்தசாமி, அதனைத்தொடர்ந்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

நாட்டில் கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்தபோதே சர்வதேச நாணய நிதியத்திடம் உதவியை நாடுமாறு நாம் அரசாங்கத்தை வலியுறுத்தினோம். இருப்பினும் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படாதபோது வெளிநாட்டுக்கையிருப்பு நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு மேலும் சில நன்மதிப்புவாய்ந்த கட்டமைப்புக்கள் மற்றும் பொருளியல் நிபுணர்களுடன் இணைந்து வலியுறுத்தினோம்.

குறிப்பாக தீவிரமடைந்த நெருக்கடிக்கான ஒரு தீர்வாகக் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கான யோசனையை அரசாங்கத்திடம் முன்வைத்தோம்.

வெளிநாட்டுக்கையிருப்புப் பற்றாக் குறை மற்றும் அதன் விளைவாக எரிபொருள், உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டால் நாட்டின் பொருளாதாரம் முகங்கொடுத்திருக்கும் பாரிய நெருக்கடி தொடர்பாக எமது வர்த்தப்பேரவை வலுவாகச் சுட்டிக்காட்டி வருவதுடன் இது தொடர்பாக அரசாங்கத்துடனும் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றது.

அதுமாத்திரமன்றி எமது பேரவையின் ஊடாகத் தற்போதைய நெருக்கடியைக் கையாள்வதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருப்பதுடன், அனைத்து சந்தர்ப்பங்களிலும் தீர்வைநோக்கி அரசாங்கத்தின்மீது அழுத்தம் பிரயோகித்துவருகின்றோம்.

இவ்வாறானதொரு பின்னணியில் கூட்டிணைந்த வர்த்தகப்பேரவை மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், பட்டயக் கணக்காளர் நிலையம் உள்ளிட்ட ஏனைய கட்டமைப்புக்களுடன் இணைந்து நாட்டில் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டுவதற்கு அவசியமான கொள்கைச்சீராக்கங்களை மேற்கொள்வது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கு எமது வர்த்தகப்பேரவை தயாராக இருக்கின்றது என்று தெரிவித்தார்.

# கொன்சியூலர் விவகாரங்களுக்கான பிரிவு வார நாள்களில் முழுமையாக இயங்கும்

## வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிவிப்பு

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவு அதன் வழக்கமான சேவைகளை மீண்டும் தொடங்குவதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவு, ஜூன் 30 முதல் ஜூலை 10 வரை திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே பொதுமக்களுக்கு சேவைகளை வழங்கும் என்று ஜூன் 29 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சு அறிவித்திருந்தது.

எவ்வாறிருப்பினும் கொன்சியூலர் சேவைகளுக்கான அதிகமான தேவையை கருத்தில் கொண்டு, இது தொடர்பான பொதுத் தேவைகளை வழங்குவதற்காக, கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவு திங்கட்கிழமை முதல் தொடர்ந்தும் அனைத்து வார நாள்களிலும் பொதுமக்களுக்காக திறந்திருக்கும்.

யாழ்ப்பாணம், மாத்தறை, கண்டி, திருகோணமலை மற்றும் குருநாகல் ஆகிய இடங்களில் உள்ள பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்களும் இதே வேலை ஏற்பாடுகளைப் பின்பற்றும் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# மட்டு. அம்பிளாந்துறை ஆலய கும்பாபிஷேகம் 13ஆம் திகதி

(க.கிருபாகரன்)



மட்டக்களப்பு ஆதியூர் அம்பிளாந்துறை ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஸ்ரீ சிவ முத்துமாரியம்மன் ஆலய புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 13 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

இதனை முன்னிட்டு, எதிர்வரும் 9 ஆம் திகதி கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து 12 ஆம் திகதி மாரியம்மன் உட்பட பரிவார மூர்த்திகளுக்கு எண்ணெய்க்காப்பு சாத்தப்பட்டு, கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. மேற்படி கும்பாபிஷேகக் கிரியைகளை சர்வபோதகார்ச்சாரியார் சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் ஆலய பிரதம பூசகர் சிவத்திரு செ.கோவிந்தராசா பூசகர், சிவப்பிரக்சாஸ்ரீதி.கு.மாணிக்கவாசகக் குருக்கள், சிவஸ்ரீ க.கு.விநாயகமூர்த்திக் குருக்கள் உள்ளிட்டோர் நிகழ்த்துவர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கருக்கலைப்புக்கு அனுமதி; அமெரிக்காவில் குழப்பம்

## உடனடி தடை விதித்தது உச்ச நீதிமன்றம்




அமெரிக்காவில் 50 ஆண்டுகால கருக்கலைப்பு சுதந்திரம் பறிக்கப்பட்ட நிலையில், டெக்சாஸ், ஓஹியோ மாகாணங்களில் கருக்கலைப்புக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்ட விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆனால், இந்த உத்தரவுகளுக்கு உச்ச நீதிமன்ற கிளை உடனடியாக தடை விதித்ததால் அமெரிக்க மக்கள் மத்தியில் கடும் குழப்பம் நிலவுகிறது. அமெரிக்காவில் கடந்த 1973ம் ஆண்டு அளிக்கப்பட்ட ரோ-வேட் வழக்கின் தீர்ப்பில், பெண்களுக்கு கருக்கலைப்பு உரிமையை அளித்தது இந்நாட்டு உச்ச நீதிமன்றம். ஆனால், இந்த உரிமையை 50 ஆண்டுகளுக்குப் பின் சமீபத்தில் அதே உச்ச நீதிமன்றமே பறித்தது.

இதனால், அமெரிக்கா முழுவதும் கருக்கலைப்புக்கு தடை விதித்து சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இதை எதிர்த்து, அமெரிக்கா மட்டுமின்றி உலகின் பல நாடுகளிலும் போராட்டம் நடந்து வருகிறது.

இந்நிலையில், டெக்சாஸ் மற்றும் ஓஹியோ மாகாண உயர் நீதிமன்றங்கள் 6 வாரத்திற்கு உட்பட்ட கருவை கலைக்க மருத்துவமனைகளுக்கு உரிமை உண்டு என கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது. இதனால் டெக்சாஸில் உள்ள மருத்துவமனைகள் மீண்டும் கருக்கலைப்பு செய்வதற்கான பணிகளை தொடங்கிய நிலையில், உயர் நீதிமன்ற உத்தரவுக்கு டெக்சாஸ் மாகாண உச்ச நீதிமன்ற கிளை தடை விதித்தது. இந்த வழக்கு இம்மாத இறுதியில் விசாரிக்கப்படும் என்றும் அது தெரிவித்துள்ளது. ஒருபுறம் பல மாகாணங்களில் கருக்கலைப்புக்கு தடை விதித்து சட்டங்கள் அமுல்படுத்தும் நிலையில், மறுபுறம் உயர் நீதிமன்றங்கள் இதுபோல் தீர்ப்பளிக்கின்றன. இதனால், கருக்கலைப்புக்காக அமெரிக்க பெண்கள் மாகாணம் விட்டு மாகாணம் அலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அப்பாலாசியா பிராந்தியின் ஆலன் நகரில் குடும்பப் பிரச்சினை காரணமாக நீதிமன்ற உத்தரவுப்படி 49 வயதான லான்ஸ் ஸ்டோர்சை பொலிஸார் நேற்று கைது செய்ய சென்றனர். அப்போது ஏற்பட்ட தகராறில் அந்த நபர் துப்பாக்கியால் சுட்டார் என கூறப்படுகிறது. இதில், அவரை கைது செய்ய சென்ற 3 பொலிஸார் பலியாகினர். அவர்களுடன் சென்ற மோப்ப நாயும் பலியானது. இருப்பினும், ஸ்டோர்சை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.



## கடும் எதிர்ப்புக்கு மத்தியில் மியன்மார் வந்தார் சீன வெளியுறவு மந்திரி

சீனா தலைமையிலான லங்காங்-மெகாங் ஒத்துழைப்பு குழு கூட்டம் மியன்மார் நாட்டில் உள்ள பாகன் நகரில் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் மீகாங் டெல்டா பகுதி நாடுகளான மியன்மா, லாவோஸ், தாய்லாந்து, கம்போடியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் வெளியுறவு மந்திரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள்.

மீகாங் டெல்டா பகுதியில் நீர்மின்சாரத் திட்டங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்க உள்ளனர். இந்நிலையில், மியன்மாரில் ராணுவம் ஆட்சியை கைப்பற்றிய பிறகு முதல் முறையாக சீனாவின் வெளியுறவு மந்திரி வாங்யி வருகை தந்துள்ளார்.

இதற்கு அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மியன்மாரில் அமைதி முயற்சிகளை மீறுவதாக உள்ளதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தி உள்ளனர். இதுதொடர்பாக மியன்மார் ராணுவ செய்தி தொடர்பாளர் கூறுகையில், மியன்மார் நாட்டில் நடைபெறும் கூட்டத்தில் வெளியுறவு மந்திரிகள் கலந்து கொண்டமை நாட்டின் இறையாண்மை மற்றும் அரசாங்கத்தை அங்கீகரிப்பதாகும் என தெரிவித்தார்.

## மேற்கு நாடுகளின் மீதான கோபத்தை உக்ரைன் மக்கள் மீது காட்டும் ரஷ்யா



உக்ரைனுக்கு உதவும் மேற்கத்திய நாடுகளை எச்சரிக்கும் வகையில் உக்ரைனில் உள்ள அப்பாவி மக்கள் மீது ரஷ்யா தாக்குதல்களை தீவிரப்படுத்தி உள்ளது. நேட்டோ அமைப்பில் இணைய எதிர்ப்பு தெரிவித்து, கடந்த பெப்ரவரி 24ம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. 5வது மாதமாக தொடரும் இந்த போரால், உக்ரைனின் பெரும்பாலான வளங்கள் அழிந்து விட்டன. அதன் முக்கிய பொருளாதாரம் நாசமாகி விட்டது. ஏற்றுமதி, இறக்குமதிக்கான முக்கிய துறைமுகமாக கருதப்படும் மரியுபோல் நகரம் ரஷ்யா கைவசம் சென்றுவிட்டது. இதேபோல், கருங்கடல் ஒட்டி உள்ள 90 சதவீத பகுதிகளையும் ரஷ்யா கைப்பற்றி உள்ளது.

கிழக்கு உக்ரைனை கைப்பற்ற தீவிரம் காட்டி வருகிறது. உக்ரைனை ஒன்றும் இல்லாத நாடாக மாற்றி, அவர்களை சரணடைய வைப்பதே ரஷ்யாவின் குறிக்கோள்.

தற்போது, நேட்டோவில் உக்ரைன், பின்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகள் இணைவது கிட்டத்திட்ட உறுதியாகி உள்ளது. இந்த போரில் உக்ரைன் வெற்றி பெற வேண்டும் என்று அமெரிக்க, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் ஆயுதங்களை வாரி வழங்கி வருகின்றன. இதை பயன்படுத்தி ரஷ்யாவுக்கு கடும் பதிலடியை உக்ரைன் கொடுக்கிறது. இதேபோல், ரஷ்யாவின் பொருளாதாரத்தை முடக்கும் வகையில் அவர்கள் 2வது மிகப்பெரிய வர்த்தகமான தங்கத்தை இறக்குமதி செய்ய ஜி-7 நாடுகள் தடை விதித்துள்ளன.

இதனால் ஆத்திரமடைந்துள்ள ரஷ்யா, இந்த நாடுகளை எச்சரிக்கும் வகையில், தனது கோபத்தை உக்ரைன் மக்கள் மீது காட்டி வருகிறது. இங்குள்ள குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்த தொடங்கியுள்ளது.

கடந்த வாரம் உக்ரைன் தலைநகர் கீவ் பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த வணிக வளாகத்தின் மீது ஏவுகணையை வீசி தாக்குதல் நடத்தியதில் 19 பேர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து, அடுத்தடுத்து பல குடியிருப்புகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. ஒடேசாவுக்கு அருகிலுள்ள கடலோர நகரத்தில் குடியிருப்புகள் மீது ரஷ்யா குண்டு வீசியதில் 2 குழந்தைகள் உட்பட 21 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு ஹைபர்சோனிக் ஏவுகணை போன்ற நவீன ஏவுகணைகள் பயன்படுத்தப்படுகின்றன.

உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறுகையில், 'உக்ரைன் தலைநகர் கீவ் உள்ள வணிக வளாகம் மீது ரஷ்ய ராணுவம் நடத்திய தாக்குதல், ஐரோப்பிய வரலாற்றில் நடந்த பயங்கரமான தீவிரவாத தாக்குதல்களில் ஒன்று' என்று கூறியுள்ளார்.

## லிபியா நாடாளுமன்றத்துக்கு தீ வைப்பு; ஐ.நா. கண்டனம்

ஆபிரிக்க நாடான லிபியாவில் அதிபர் கடாபியின் மறைவுக்குப் பிறகு அரசியல் குழப்பம் நீடித்து வருகிறது. தற்போதைய அரசுக்கு தொடர்ந்து எதிர்ப்பை தெரிவித்து மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே, டாப்ரக் நகரில் உள்ள லிபிய நாடாளுமன்றத்தைச் சூறையாடிய மக்கள் நாடாளுமன்ற கட்டடத்திற்கு தீ வைத்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இந்நிலையில், லிபிய நாடாமன்ற கட்டடத்துக்கு தீ வைத்த சம்பவத்துக்கு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவை கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மண்டப முகாமில் இலங்கைத் தமிழ் இளைஞர் தாயாரின் கண்டிப்பால் எடுத்த விபரீத முடிவு



மண்டபம் அகதிகள் முகாமில் இருந்த இலங்கைத் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், கைப்பேசியில்கேம்விளையாடுவதைதாய்கண்டித்தமையால் தற்கொலை செய்துகொண்டுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஒரு மகன், மூன்று பெண் பிள்ளைகளுடன் இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகத்திற்கு வந்து மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்கி வசித்து வரும் ராணி என்ற பெண்மணியின் மகனான நிரோஷன் (22 வயது) பெயிண்டிங் வேலை செய்து வந்துள்ளார். கடந்த சில நாள்களாக வேலைக்குச் செல்லாத அவர், மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் உள்ள நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு கைப்பேசியில் கேம் விளையாடி சுற்றித்திரிந்ததைஅறிந்ததாயார்,கேம்விளையாடுவதை விட்டுவிட்டு வேலைக்கு செல்லுமாறு கண்டித்தார் என கூறப்படுகிறது.

இதையடுத்து தாயின் கண்டிப்பால் மனமுடைந்த நிரோஷன், கடந்த இரண்டு நாள்களுக்கு முன்பு தனது வீட்டில் இருந்த எலி மருந்தைக் குடித்திருக்கிறார். மயக்க நிலையில் இருந்த நிரோஷனை பார்த்த அவரது நண்பர்கள் மண்டபம் முகாமில் உள்ள அரசு மருத்துவமனையில் சேர்த்து முதலுதவி சிகிச்சை அளித்து, பின்னர் தனியார் வாகனம் மூலம் ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சையில் அனுமதித்திருக்கின்றனர்.

அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் மேல் சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்து வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இது குறித்து உயிரிழந்த இளைஞரின் சகோதரி பிரியா கொடுத்த புகாரின் அடிப்படையில் மண்டபம் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். வேலைக்குச் செல்லாமல் தனது கைப்பேசியில் கேம் விளையாடுவதைத் தாய் கண்டித்தமையால் விபரீத முடிவை எடுத்த இளைஞரின் செயல், அப்பகுதியில் உள்ள மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## பிள்ளைகளை ஒப்பிட வேண்டாமென அமைச்சர் அன்பில் மகேஷ் அறிவுரை



சென்னை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாடசாலைகளில் படித்து 10, 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில், பள்ளியளவில் முதல் 3 இடங்களை பிடித்த மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி சென்னை பசுமை வழிச்சாலையில் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ், 350 மாணவர்களுக்கு தலா 3,000 ரூபா கல்வி ஊக்கத்தொகையையும் அவர்களின்பெற்றோர்களுக்கு பரிசுகளையும் வழங்கினார்.

பின்னர் உரையாற்றிய அமைச்சர் அன்பில் மகேஷ், பள்ளிப்படிப்பை முடித்த மாணவர்கள், உயர்கல்வியைத் தொடருகிறார்களா? என்பதை உறுதி செய்ய வேண்டியது ஓர் அரசின் கடமை. ஒவ்வொரு கட்சியும் ஆட்சிக்கு வந்த உடன், கல்விக்காக சில திட்டங்களை கொண்டுவருவது வழக்கம்தான். ஆனால், கடந்த ஆட்சியாளர்கள் ஒவ்வொருவரின் தலையிலும் 75,000 ரூபா கடனை வைத்துவிட்டுச் சென்றனர். இருந்த போதும், கடும் நிதி நெருக்கடிக்கு மத்தியில் பள்ளிக்கல்விக்காக 38,000கோடியைமுதலமைச்சர் ஒதுக்கியுள்ளார்.

அரசுப் பள்ளிகள் மீது அதிக கவனம் செலுத்திவருவதன் காரணமாக, நடப்பு கல்வியாண்டில் 9 லட்சம் மாணவர்கள் புதிதாக அரசுப் பள்ளிகளில் சேர்ந்திருக்கிறார்கள். இதற்கு காரணம் அரசின் திட்டங்கள்தான், என்று தெரிவித்தார்.

குழந்தைகளை யாருடனும் ஒப்பீடு செய்யக்கூடாது. ஒவ்வொரு குழந்தைக்கென்று தனித்திறமை உண்டு அத்தனித்திறனை அடையாளம் கண்டு அதை பெற்றோர்கள் ஊக்கப்படுத்த வேண்டும். எத்தனை புள்ளிகள் எடுத்தாலும், பிள்ளைகளை கொண்டாடிப் பழகவேண்டும், என்று பெற்றோர்களுக்கும் அவர் அறிவுரை வழங்கினார்.




## ரொக்கெட்டுக்களை ஏவுவதற்கு புதிய தளம் அமைப்பு

தமிழகத்தின் தென் பகுதியில் இருக்கும் குலசேகரபட்டினத்தில் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் புதிய ரொக்கெட் ஏவுதளம் அமைக்கப்படவுள்ளது. இதற்காக 2,000 ஏக்கர் நிலம் தமிழக அரசினால் கையகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோவின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே புவியியல் அடிப்படையில் பூமத்திய ரேகைக்கு அருகில் ஸ்ரீஹரிகோட்டா இருப்பதால்தான் தலைசிறந்த ஏவுதளமாக விளங்குகிறது. அதேபோல் பூமத்திய ரேகைக்கு இன்னும் மிக அருகில் குலசேகரப்பட்டணம் இருப்பதால், குறைந்த பொருள்செலவில் ரொக்கெட்டுகளை அனுப்ப புவியியல் ரீதியாக குலசேகரப்பட்டினம்உகந்த பகுதியாக இருப்பதாக இஸ்ரோ கண்டறிந்துள்ளதாகவும், அது மட்டுமில்லாமல் பூமி, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சாய்ந்த கோணத்தில் சுழல்கிறது கிழக்குப் பகுதிக்கு அருகில் இருந்து அனுப்பினால், குறைந்த எரிபொருள் செலவில் பூமியின் சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்த முடியும் என்றும் இந்தியாவில் எந்தப் பகுதிக்கும் இல்லாத அமைவிடமாக குலசேகரப்பட்டினம் உள்ளது என்றும் இஸ்ரோவின் விஞ்ஞானியொருவர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

இஸ்ரோவின் அடுத்த சிறிய வகையிலான செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பும் எஸ்.எஸ்.எல்.வி. திட்டம் ஜூலை மாத இறுதி அல்லது ஓகஸ்ட் முதல் வாரத்தில் செயற்படுத்தப்படும், என்றும் அந்த விஞ்ஞானி குறிப்பிட்டிருக்கிறார்.

# மணிப்பூரில் நோனி நிலச்சரிவு; இராணுவ வீரர்கள் உட்பட 14 பேர் உயிரிழப்பு



மணிப்பூரின் நோனி மாவட்டத்திலுள்ள துபுல் யார்டு ரயில்வே கட்டுமான முகாமில் கடந்த புதன்கிழமை இரவு அன்று இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதுவரை 14 பேர் உயிரிழந்துள்ள நிலையில், மேலும் பலர் நிலச்சரிவில் புதையுண்டிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

இந்தநிலையில்அசாம்ரைபிள்ஸ் மற்றும் டெரிடோரியல் இராணுவ வீரர்கள், துபுல் ரயில் நிலையத்தின் பொதுப் பகுதியில் தொடர்ந்து மீட்புப் பணியைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இது குறித்து உரையாற்றிய டி.ஜி.பி. பி. டவுங்கல் தகவல் வழங்கையில், இடிபாடுகளிலிருந்து இதுவரை மொத்தம் 23 பேர் மீட்கப்பட்டுள்ளனர். அதில் 14 பேர் உயிரிழந்துவிட்டனர். மீட்பு மற்றும் தேடுதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரை எத்தனை பேர் நிலச்சரிவில் புதையுண்டுள்ளனர் என்பது உறுதி செய்யப்படவில்லை. ஆனால், கிராம மக்கள், ராணுவம் மற்றும் ரயில்வே பணியாளர்கள், தொழிலாளர்கள் என சுமார் 60 பேர் அதில் சிக்கியுள்ளனர் என கூறியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இலங்கை உதவி கோருகின்ற நாடுகளை 'ஒரே நாடு; ஒரே சட்டம்' உரசிப் பார்க்கும்!

## கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.எம்.மஹ்றதி எச்சரிக்கை

"பாரிய பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் கஷ்டப்படும் இந்த இக்கட்டான நேரத்தில் 'ஒரே நாடு; ஒரே சட்டம்' செயலணி தனது இன வெறுப்புக் கருத்துக்கள் கொண்ட பரிந்துரைகளை முன் மொழிந்திருப்பது நாம் கையேந்தியிருக்கும் நாடுகளின் உள்ளங்களை நிச்சயமாக உரசிப்பார்க்காமல் இருக்காது.

"இந்த இக்கட்டான கால கட்டத்தில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் சிறுபான்மை சமூகத்தை மையங்கொண்ட 'ஒரேநாடு; ஒரேசட்டம்' செயலணியின் பரிந்துரைகள் போன்ற இனவெறுப்பு எண்ணங்களை அழிக்க வேண்டுமே தவிர சிறுபான்மையினரின் உடமைகளை அல்ல."

- இப்படி கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம். எம். மஹ்றதி தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தாம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளவை வருமாறு:-

கடந்த காலங்களில் அரசியலுக்காக இன, மத வாதங்களையும் வெறுப்புணர்வுகளையும் கையில் ஏந்திய ஞானசார தேரர், ரத்ன தேரர், விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, சரத் வீரசேகர போன்றவர்களின் உணர்ச்சி வசப் பேச்சுக்களால் தூண்டப்பட்டு முஸ்லிம்களின் உடைமைகள், உயிர்கள், பள்ளிகள், வியாபார நிலையங்கள் எனப் பல்லாயிரம் கோடிகள் பெறுமதியான தேசிய சொத்துக்கள் தீயிட்டு அழிக்கப்பட்டன.

அல் குர்ஆன் எரிப்பு, மத்ரஷாக்கள் தடை, முஸ்லிம் சமூகசேவை நிறுவனங்கள் தடை, அரசியல் தலைவர்கள், ஆன்மீக தலைவர்கள், கல்விமான்களின் கைது, வீண் பழிகள் சுமத்தல், இட்டுக் கட்டல், ஜனாஸாக்கள் எரிப்பு எனப் பல்வேறு வழிகளிலும் திட்டமிட்டு அநியாயமாக முஸ்லிம் சமூகம் துன்புறுத்தப்பட்டது.

இவ்வாறான இனவெறுப்புச் செயற்பாடுகளின் காரணமாகவே இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டு வெளிநாட்டு உதவிகளும் நிறுத்தப்பட்டன.

பாரிய பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் கஷ்டப்படும் இந்த இக்கட்டான நேரத்தில் 'ஒரே நாடு; ஒரே சட்டம் செயலணி தனது இன வெறுப்புக் கருத்துக்கள் கொண்ட பரிந்துரைகளை முன் மொழிந்திருப்பது நாம் கையேந்தியிருக்கும் நாடுகளின் உள்ளங்களை நிச்சயமாக உரசிப்பார்க்காமல் இருக்காது.

ஆகவே இவ்வாறான இனவெறுப்பு எண்ணங்களை இல்லாமல் செய்து நல்லிணக்கம், இன நல்லுறவுகளை வளர்க்கும் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# அம்பலத்தடி பிள்ளையாருக்கு செவ்வாய் எண்ணெய்க் காப்பு





(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கல்முனை மாநகர் நற்பிட்டிமுனை அருள்மிகு ஸ்ரீ அம்பலத்தடி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேக பெருஞ் சாந்தி நிகழ்வின் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது. அன்று காலை 5 மணி முதல் மாலை 5 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

மறுநாள் 6 ஆம் திகதி புதன்கிழமை அஷ்டபந்தனை பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இடம்பெற இருக்கின்றது என ஆலய பரிபாலன சபை பொருளாளரும் ஓய்வு நிலை கணிதபாட உதவி கல்வி பணிப்பாளருமான எஸ்.இலங்கநாதன் தெரிவித்தார்.

குறிப்பாக அன்று அதிகாலை 5.56 மணி முதல் 6.44 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீ அம்பலத்தடி விநாயகர் பெருமாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேக குடமுழுக்கு இடம் பெற இருக்கின்றது.

பிரதிஷ்டா பிரதம குரு ஈசான சிவாச்சாரியார் சிவ ஸ்ரீ க.கு. மோஹனாநந்த குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற இருக்கின்றது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 11 தினங்கள் மண்டலாபிஷேக பூஜைகள் நடைபெறும்.

18 ஆம் திகதி திங்கட்கிழமை 1008 சங்குகளுடன் சகஸ்ர நாம சங்காபிஷேகம் இடம்பெறும்.

அதேவேளை அன்று 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு பாற்குட பவனியும், 9 மணிக்கு சங்காபிஷேகமும், அதனை தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறவிருக்கின்றன.

## இந்திய கலாசார இசை நடன நிகழ்ச்சி செவ்வாய் மட்டு. தேவநாயகம் அரங்கில்

(க.கிருபாகரன்)

'மியூசிக் ஒவ் ஸ்பிறிட்' ஆத்ம இசை குழுவினர் வழங்கும் 'வருக! ஆத்ம அனுபவம் பெறுக!' எனும் தொனிப்பொருளிலான இந்திய கலாசார இசை நடன நிகழ்ச்சி எதிர்வரும் 5 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் மாலை 4.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை இடம்பெறவுள்ளது.

இவசமாக நடைபெறவுள்ள இந்நிகழ்வானது தற்காலத்தில் எரிபொருள் மற்றும் எரிவாயு இன்மை போன்றவற்றால் மனவேதனையுற்ற மக்களின் மனங்களுக்கு சகஜ யோகா மூலம் ஆத்ம விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் இந்திய இசையமைப்பாளரான பி.ரி.டனன்ஜய் டுமாலின் இசையமைப்பில் பாடகர்களான அனன்டிற்றா வாசு மற்றும் லரா டுமால் ஆகியோர் தமது இனிய குரலால் பக்தி ரசனையுடன் புண்பட்ட நெஞ்சங்களுக்கு ஆறுதலளிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வு சிறப்புற அமைய அனைவரும் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுக்கின்றனர்.

# கிழக்கில் சுற்றுலாப் பயணிகள் மாட்டு வண்டிகளில் பிரயாணம்





அம்பாறை மாவட்டத்தில் சுற்றுலாத்துறைக்குப் புகழ்பெற்றுக் காணப்படுகின்ற பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மாட்டு வண்டியில் பிரயாணம் செய்து வருகின்றனர்.

நாடு பொருளாதார நெருக்கடிக்கும், எரிபொருள் தட்டுப்பாட்டிற்கும் முகம் கொடுத்துள்ள இக்கட்டான இந்தக் காலக் கட்டத்திலும், பொத்துவில் அறுகம்பை பிரதேசத்துக்கு சுற்றுலா பயணிகளின் வருகையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. எரிபொருள் பற்றாக்குறை காரணமாக சுற்றுலா பயணிகளை ஏற்றிச் செல்லும் ஓட்டோச் சாரதிகளும் வருமானமிழந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

# அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் சைக்கிள் திருடர்கள் கைவரிசை

## அவதானமாக இருக்க எச்சரிக்கை

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் அண்மைக்காலமாக சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுவதால் பொது மக்களை அவதானமாக இருக்குமாறு அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பெரும் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மஜீட் கடந்த வியாழனன்று தெரிவித்தார். நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் மத்தியில் தற்போது சைக்கிள் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. பாதை ஓரங்கள், பொது இடங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் நிறுத்தி வைக்கப்படும் சைக்கிள்களை அதன் உரிமையாளர்கள் பாதுகாப்பான முறையில் வைக் குமாறு அவர் கேட்டுள்ளார்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களில் சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றன எனபொலிஸ் நிலையத்தில் அதிகமான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என மேலும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை சைக்கிள் காணாமல் போனால் உடனடியாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யும் பட் சத்தில் திருடனை உடனடியாக கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# இலங்கையின் பொருளாதார மீட்சி; அமெரிக்க தூதர் அபிப்பிராயம்






இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் சவால்கள் மிகவும் தீவிரமானவை என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இருப்பினும் அவை தீர்வு காணமுடியாத அல்லது கடந்துவரமுடியாத சவால்கள் அல்ல என்று சுட்டிக்காட்டியிருக்கும் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங், இந்தப் பொருளாதார நெருக்கடிக்குத்தீர்வுகாண்பதற்கு புத்தாக்க சிந்தனை, தலைமைத்துவம், அர்ப்பணிப்பு மற்றும் விட்டுக்கொடுப்பு என்பவற்றுடன் கூடியதாக அரசியல் உறுதிப்பாடும் விரைவான நடவடிக்கைகளும் இன்றியமையாதவையாகும் என்றும் வலியுறுத்தியிருக்கின்றார்.

அதுமாத்திரமன்றி, கடன் நெருக்கடிக்குத் தீர்வுகாணல், மனிதவளத்தின்மீது முதலீடு செய்வதுடன் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், வணிகச் சூழல் மற்றும் முதலீட்டு செயற்திட்ட இடைவெளி என்பன தனியார் துறையினரை உள்வாங்கக்கூடியவகையில் விரிவுபடுத்தப்படுத்தப்படல், பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திவலு ஆகியவற்றை நோக்கி நிலைமாற்றமடைதல், அமெரிக்காவிற்கான ஏற்றுமதி மற்றும் முதலீட்டு வருமானம் ஆகியவற்றை மேலும் அதிகரித்தல் ஆகிய 5 நடவடிக்கைகளும் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சியடைவதற்கு இன்றியமையாதவையாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இலங்கையின் வர்த்தகப்பேரவையின் (சேம்பர் ஒவ் கொமர்ஸ்) 183 ஆவது வருடாந்தப்பொதுக்கூட்டம் கொழும்பில் அமைந்துள்ள சினமன் கிரான்ட் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டிருந்த அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங், நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

அமெரிக்காவின் இராஜாங்கத்திணைக்களம் மற்றும் திறைசேரி ஆகிய–வற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழுவினரின் இலங்கைக்கான மிகமுக்கியவிஜயம் முடிவிற்குக்கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

அந்தஅதிகாரிகள்குழு இலங்கையில் அரசியல் பிரதிநிதிகள், பொருளியல் நிபுணர்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாகப் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை முன்னெடுத்தன.

பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கைக்கு உதவக்கூடிய வழிமுறைகள், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கு இலங்கையர்கள் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகள், எதிர்காலத்தில் நிலைபேறானதும், அனைவரையும் உள்ளடக்கியதுமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்கள் ஆகிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதே இந்த விஜயத்தின் முக்கிய நோக்கமாக அமைந்திருந்தது.

அதுமாத்திரமன்றி தற்போது வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கை மக்களின் வாழ்க்கை முறையை ஓரளவிற்கு எளிதாக்கல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரல் ஆகிய–வற்றை அடைந்துகொள்வதற்கு கடன் வழங்குநர்களுடனும், நிவாரண உதவிச்செயற்திட்டமொன்றுக்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடனும் உடனடியாகப் பேச்சுகளை முன்னெடுக்கவேண்டியதன் அவசியம் தொடர்பாக அந்த அதிகாரிகள் அரசாங்கத்திடம் வலியுறுத்தினர்.

தற்போது இலங்கை அதன் வரலாற்றில் மிகவும் மோசமான சவாலான காலப்பகுதியில் இருக்கின்றது.

எரிபொருளுக்கான வரிசைகள் நீண்டுசெல்வதையும், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துச் செல்வதையும் எம்மால் அவதானிக்க முடிகின்றது.

மின்விநியோகம் துண்டிக்கப்படும் சந்தர்ப்பங்களில் நாம் இருளில் இருப்பதுடன், விரக்தி மிகுந்த இலங்கை யர்களின் குரல்களை அமைதிப்போராட்டங்களில் செவிமடுக்கமுடிகின்றது.

நான் தினமும் நடத்தும் சந்திப்புக்களின்போது எதிர்காலம் தொடர்பாகவும், அடுத்த சந்ததி குறித்தும் தாம் கொண்டிருக்கும் கரிசனையை இலங்கையர்கள் பகிர்ந்துகொள்கின்றார்கள்.

இலங்கை முகங்கொடுத்திருக்கும் சவால்கள் மிகவும் தீவிரமானவை என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இருப்பினும் அவை தீர்வு காணமுடியாத அல்லது கடந்துவரமுடியாத சவால்கள் அல்ல.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கு புத்தாக்க சிந்தனை, தலைமைத்துவம், அர்ப்பணிப்பு மற்றும் விட்டுக்கொடுப்பு என்பன அவசியமாகும்.

அதுமாத்திரமன்றி அரசியல் உறுதிப்பாடும் விரைவான நடவடிக்கைகளும் இன்றியமையாதவையாகும்.

அதேவேளை இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் உறுதியான பாதைக்குக் கொண்டுவருவதற்கு எமது கூட்டிணைந்த முயற்சிகளை இரட்டிப்பாக்கவேண்டிய தருணம் இதுவாகும்.

முன்னெப்போதையும் விட இப்போது இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தக்கூடிய வாய்ப்பு தனியார் துறையிடம் காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பொருளாதார மீட்சிக்கும், அனைத்து இலங்கையர்களுக்கும் பயனளிக்கக் கூடியவாறான நீண்டகாலத்தீர்வுக்கும் இலங்கை முன்னெடுக்கவேண்டிய 5 பிரதான நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். முதலாவதாக கடன் நெருக்கடிக்குத் தீர்வுகாணப்படவேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டமை, சட்ட மற்றும் நிதி ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டமை, கடன்மறுசீரமைப்பை மேற்கொள்வதற் கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டமை என்பன வரவேற்கத்தக்க நடவடிக்கைகளாகும்.

ஆனால் இலங்கையை மீண்டும் ஸ்திரமான பொருளாதார வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டுசெல்வதற்கு மேலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது.

அதன்படி சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச்செயற்திட்டம் இலங்கைக்குக் கிடைக்கப்பெறுவது உறுதிப்படுத்தப்படவேண்டும். அதேபோன்று அரசாங்கம் மேற்கொள்ளும் மறுசீரமைப்புக்கள் இந்த நெருக்கடிக்கான அடிப்படைக் காரணத்துக்குத் தீர்வளிக்கும் வகையில் அமையவேண்டும்.

இரண்டாவதாக இலங்கை அதன் மக்கள்மீது முதலீடு செய்யவேண்டும். எவ்வித பாலின பாகுபாடுகளுமற்ற தொழிற்படையொன்றைக் கொண்டிருப்பது இன்றியமையாததாகும்.

எனவே இலங்கையில் வர்த்தகத்துறையில் பெண்களின் பங்களிப்பு மேலும் விரிவுபடுத்தப்படவேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

அதேவேளை மக்களின் கோரிக்கைகளுக்கும் அவர்களது ஜனநாயகக் கோரிக்கைகளுக்கும் அரசாங்கம் மதிப்பளிக்கவேண்டியது அவசியமாகும்.

ஆகவே, சுயாதீன கட்டமைப்புக்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு இடமளித்தல், பயங்கரவாதத்தடைச்சட் டத்தை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக மாற்றியமைத்தல், சிவில் சமூக அமைப்புக்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு இடமளிப்பதுடன் சிவில் சமூக இடைவெளிக்கு மதிப்பளித்தல் ஆகிய–வற்றை நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்துகின்றோம்.

மூன்றாவதாக வணிகச்சூழல் மற்றும் முதலீட்டு செயற்திட்ட இடைவெளி என்பன தனியார் துறையினரை உள்வாங்கக்கூடியவகையில் விரிவுபடுத்தப்படவேண்டும். நான்காவதாக தற்போதைய சூழ் நிலையில் இலங்கை பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திவலு ஆகியவற்றை நோக்கி நிலைமாற்றமடையவேண்டும்.

ஐந்தாவதாக இலங்கை அமெரிக்காவிற்கான அதன் ஏற்றுமதிகளையும் முதலீட்டு வருமானத்தையும் மேலும் அதிகரிக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# நாட்டின் பல பகுதிகளில் கடல் கொந்தளிப்பு; காலியில் நிலப்பரப்பிற்குள் புகுந்தது கடல்நீர்!






நாட்டின் பல பகுதிகளில் நேற்று (சனிக்கிழமை) கடல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், காலியில் நிலப்பரப்புக்குள் கடல்நீர் புகுந்துள்ளதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். தெஹிவளை, காலி, அம்பலாங்கொடை கடற்பிரதேசங்களில் கடல் கொந்தளிப்பு அதிகமாக ஏற்பட்டுள்ளது. நேற்று மாலை கடல் அலைகள் கரையை நோக்கி வந்ததால் காலி துறைமுக பொலிஸ் சுங்கம் உள்ளிட்ட பல இடங்களுக்குள் கடல்நீர் புகுந்துள்ளது.

கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல மீனவப் படகுகளும் அலைகளால் நிலப்பகுதியை நோக்கி இழுத்து வரப்பட்டுள்ளன. அத்துடன் காலி –மாத்தறை பிரதான வீதியின் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

சமுத்திர மாவத்தையின் கரையும் சேதமடைந்துள்ளதுடன், நிலவும் பலத்த காற்றுடன் கடல் அலைகள் கரையை நோக்கிப் பாய்ந்துள்ளன. இதையடுத்து கொழும்பு முதல் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடல் பரப்பை எதிர்வரும் 24 மணிநேரத்துக்கு பயன்படுத்த வேண்டாமெனவளிமண்டலவியல்திணைக்களம்அறிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.07.2022இல் வெளியிடப்பெற்றது.